**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.47/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 20.06.2024**

| | |
|---|---|
| **Name : சிந்தாமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் நாச்சம்பட்டி குடியிருந்து டிரைவர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். செலவடை கிராமம் பஞ்சாயத்தில் உள்ள நாச்சம்பட்டியில் 4 ஏக்கர் தோப்பு புறம்போக்கு பூமி என் வசம் உள்ளது. அற்கு பட்டா ஏதுவும் இல்லை. எனது அனுபவத்தில் உள்ளது. நிலம் சம்மந்தமாக நான் அனுபவித்து வருவது குறித்து 20 ஆண்டுகளாமாக பிரச்சனனை இருந்து வருகிறது.

2) கடந்த 16.01.2022 ஆம் தேதியன்று மாலை 4 மணிக்கு மேல் எனது இருசக்கர வாகனமான Super Splender TN 30 BV 3443 ல் வீட்டிற்கு செல்வதற்காக முனியப்பன் கோவில் அருகே எங்கள் காட்டு முன்பாக சென்று கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் எங்கள் காட்டில் கிரிக்கெட் விளையாடி கொண்டிருந்தார்கள். நான் சாலையில் சென்ற போது பந்து என் மீது அடித்தால் பட்டது. நான் ஏன் இவ்வாறு வெள்ளாமை செய்யும் காட்டில் இவ்வாறு விளையடிகிறீர்கள் என்று கேட்டபோது கோபி மற்றும் அருண் இருவரும் என்னை கெட்ட வார்த்தையால் தேவிடியா பையா என்று சொல்லி திட்டினார்கள்.

3) பிறகு அருண் என்பவர் கையால் எனது நெஞ்சு மீது அடித்து காயம்

ஏற்படுத்தினார். பிறகு ராமகிருஷ்ணன் பேட்டால் தலை மீது அடித்தார்கள். எனது நண்பர் செல்வமணி, பெருமாள், ரமேஷ் மூவரும் வந்து ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டபோது கொல்லாமல் விட மாட்டேன் என்ற மிரட்டினார்கள். பிறகு காயம்பட்ட என்னை செல்வமணி என்பவர் இருசக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்.

4) காயம் பட்ட என்னை ஜலகண்டாபுரம் போலீசார் மருத்துவமனையில் விசாரித்து காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், ஆஜரில் கோபி மற்றும் அருண் இருவரும் உள்ளார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.2**
**மேட்டூர்.**